

சிவகாசி மாநகர தி.மு.க. சார்பில் கலைஞரின் 102 வது பிறந்த நாள் விழா திருத்தங்கல் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது . அலங்கரித்து வைக் கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு , மாநில வர்த்தக அணி துணை செயலாளர் வனராஜா , மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதய சூரியன் , மேயர் சங்கீதா இன்பம், ஒன்றிய தி.மு.க. செயலாளர் விவேகன்ராஜ் மற்றும் கட்சி நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர் .


சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி எஸ்.எஸ்.கோட்டையில் பள்ளி கல்வித்துறை சார்பில் முதல்வரின் விலையில்லா பாடப் புத்தகங்கள் மற்றும் பள்ளி மாணவ – மாணவிகளுக்கான உபகரணங்களை கூட்டுறவுத் தறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் ஒன்றிய செயலாளர் கே. பாலசுப்பிரமணியன் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

### செம்மொழி நாளாம் கலைஞர் 102வது பிறந்த நாள் விழா!

# திருவண்ணாமலை மாநகரம் முழுவதும் நலஉதவிகள்!

## கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் நலஉதவிகள் வழங்கினார்!

திருவண்ணாமலை, ஜூன் 5 -

திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை முன்னிட்டு அறுசுவை உணவு வழங்குதல், நலஉதவிகள் வழங்குதல் நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாக்களில் கலந்து கொண்டு, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

03.06.2025 செவ்வாய் கிழமை அன்று காலை 9.30 மணிக்கு, திருவண்ணாமலை, காந்தி சிலை அருகிலிருந்து திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளாம், செம்மொழி நாளை முன்னிட்டு அறுசுவை உணவு மற்றும் நலஉதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் தலைமை வகித்தார்.

பகுதி கழக பொறுப்பாளர்கள் சு.விஜி(எ)விஜியராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அவர்கள் கலந்து கொண்டு, காலை 9.30 மணிக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் பொதுமக்களுக்கு கம்பங்கூழ், கரும்பு சாறு, மோர் ஆகியவற்றை வழங்கினார்.

காலை 10.00மணிக்கு சின்ன கடைத் தெருவில் மாவட்ட பிரதிநிதி இல. குணசேகரன் ஏற்பாட்டில் 100 மகளிருக்கு சேலைகளும், 250பேருக்கு அறுசுவை உணவுகளும் வழங்கப்பட்டது.

காலை 10.15மணிக்கு, மாவட்ட பிரதிநிதி அ.கண்ணன், வட்ட செயலாளர் ம.வினோத்குமார் ஏற்பாட்டில் 250பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

காலை 11.00மணிக்கு, அண்ணா சிலை அருகில் 250பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பிற்பகல் 12.00மணிக்கு மின்கழக தொ.மு.ச., திட்ட செயலாளர் நா.சரவணன் ஏற்பாட்டில் 500 பேருக்கு பிரியாணி பொட்டலங்களை டாக்டர் எ.வ.வே.கம்பன் வழங்கினார்.

பிற்பகல் 12.15மணிக்கு தொ.மு.ச., மாநிலத் துணைத் தலைவர் க.சௌந்தரராசன் ஏற்பாட்டில், சிட்கோ அரசு பேருந்து பணிமனையில் 500பேருக்கு அறுசுவை வழங்கினார்.

பிற்பகல் 12.30 மணிக்கு டாக்டர் அம்பேத்கர் தெருவில், வட்ட செயலாளர் செ.எழில்மாறன் ஏற்பாட்டில் 500பேருக்கு அறுசுவை உணவு பொட்டலங்கள் மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பிற்பகல் 12.45மணிக்கு, தியாகி அண்ணாமலை நகரில் மாவட்ட துணை அமைப்பாளர் கிரிக்கெட் க.ரவி ஏற்பாட்டில் மாணவர்களுக்கு வினாடிவினா நிகழ்ச்சினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

பிற்பகல் 1.00மணிக்கு வழக்கறிஞர் மாவட்ட அமைப்பாளர் இரா.கார்த்திகேயன் ஏற்பாட்டில் கிரேஸ் மருத்துவமனை முதியோர் இல்லத்தில் அறுசுவை உணவினை வழங்கினார்.

பிற்பகல் 1.15மணிக்கு, காந்தி நகர் பைபாஸ் சாலையில் பகுதி பொறுப்பாளர் சி.எஸ்.சண்முகம் ஏற்பாட்டில் 500பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பிற்பகல் 1.30மணிக்கு, வேட்டவலம் சாலையில் வட்ட செயலாளர் கு.குமார் ஏற்பாட்டில், 250பேருக்கு பிரியாணி மற்றும் இனிப்புகள் வழங்கினார்.

பிற்பகல் 1.45மணிக்கு, தண்டராம்பட்டு ரோடு, தாமரை நகரில் பகுதி பொறுப்பாளர் பா.ஷெரீப் ஏற்பாட்டில் 100 மகளிர்க்கு சேலைகள், 250பேருக்கு பிரியாணி பொட்டலங்கள் வழங்கினார்.

பிற்பகல் 2.00 மணிக்கு, மாரியம்மன் கோயில் தெருவில் பகுதி பொறுப்பாளர் குட்டி க.புகழேந்தி ஏற்பாட்டில் 100மகளிருக்கு சேலைகளும், 500பேருக்கு அறுசுவை உணவுப் பொட்டலங்களை வழங்கினார்.

பிற்பகல் 2.15 மணிக்கு, தேனிமலை, அரசு பேருந்து பணிமனையில் க.சௌந்தரராசன் ஏற்பாட்டில் 250பேருக்கு அறுசுவை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கினார்.

பிற்பகல் 2.30மணிக்கு கணந்தம்பூண்டி டாஸ்மாக் அலுவலகம் அருகில், மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ஆறுமுகம் ஏற்பாட்டில் 500பேருக்கு சிக்கன் பிரியாணி மற்றும் இனிப்புகளை வழங்கினார்.

பின்னர் பின்னர் மாலை 6.00மணிக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.கண்ணதாசன் ஏற்பாட்டில் 500 பேருக்கு பிரியாணி பொட்டலங்களை வழங்கினார்.

மாலை 7.00மணிக்கு பச்சையம்மன் கோயில் அருகில், பகுதி கழக பொறுப்பாளர் அ.கோவிந்தன் ஏற்பாட்டில் கலைஞர் பிறந்த நாள் விழா நடைபெற்றது. விழாவில் கலந்து கொண்டு, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் அவர்கள் 500மகளிருக்கு சேலைகளும், 250 நபருக்கு அறுசுவை உணவுகளையும் வழங்கினார்.

அமைப்புசாரா ஓட்டுநர் அணி சார்பில் அனைத்து ஆட்டோ நிறுத்தங்களிலும் கலைஞர் பிறந்த நாள் இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம்.நேரு, காலேஜ் கு.ரவி, ஏ.ஏ.ஆறுமுகம், கு.கணேஷ், துணை மேயர் சு.ராஜாங்கம்,

வழக்கறிஞர்கள் டி.எம். கதிரவன், அ.அருள்குமரன், எஸ்.கண்ணதாசன், என். முரளி, நகர நிர்வாகிகள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், இல.குணசேகரன், அ.கண்ணன், மாமன்ற உறுப்பினர்கள் மெட்ராஸ்கே.சுப்பிரமணி, உதயாரவி, காயத்திரி கிருஷ்ணகுமார், பி.ஆர். நாகராஜ், கா.கோபிசங்கர், கலைவாணிசுரேஷ், வட்ட செயலாளர்கள் செ.எழில் மாறன், அ.கஜபதி, எஸ். கே.டி.வீரா, அ.வடிவேல், கோல்டு.மஞ்சு, ப.கண்ணன், அ.ஆறுமுகம், ஆ. அருண்குமார், சென்னை. சுரேஷ், கு.தியாகு, நகர அமைப்பாளர்கள் மண்டி. ஆ.பிரகாஷ், எம்.குணாளன், நகர துணை அமைப்பாளர்கள் சச்சின்.சபரி, கீழ்நாத்தூர் ராஜேந்திரன், மூ.சூரியபிரகாஷ், சா.ரகுநாதன், சு.சந்தோஷ், எம்.எஸ்.டி.மணிகண்டன், ஆ.சீனுவாசன், க.திலீப் குமார், மூ.ராஜேஷ் கண்ணா, சி.ரகுபதி மற்றும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தை சார்ந்த ஜி.நடராஜன், கே.சண்முகம், ஆர். ரங்கநாதன், ஆர்.மலைவாசன், ஜி.சம்பத், மின்னல். பாபு, எஸ்.ரவி, வி.மகாவிஷ்ணு, ஆர்.மனோகரன், எல்.இலட்சுமணன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### வழக்கறிஞர் வணக்கம் வெ.இரவி நிகழ்ச்சி ஏற்பாட்டில்


# சென்னை உயர்நீதிமன்றத்தில் ‘செம்மொழி நாள்’ விழா!

## 1000 பேருக்கு சர்க்கரை பொங்கல் வழங்கல்!

சென்னை, ஜூன் 5 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் ஜூன் 3- செம்மொழி நாள் விழாவாக சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சொத்துப் பாதுகாப்பு வழக்கறிஞர் பிரிவு தலைவர் வழக்கறிஞர் வணக்கம் வெ.இரவி நிகழ்ச்சி ஏற்பாட்டில் நேற்று கொண்டாடப் பட்டது.

இவ்விழாவில் வழக்கறிஞர்கள், பணியாளர்கள், பொதுமக்கள் என ஆயிரம் பேருக்கு சர்க்கரை பொங்கல் வழங்கப் பட்டது.


நெல்லை மாநகராட்சி கல்லணை மகளிர் மேல்நிலைப் பள்ளி,பேட்டை மாநகராட்சி மகளிர் மேல்நிலை பள்ளி,பேட்டை புனித அந்தோணியார் உயர்நிலை பள்ளிகளில் திராவிட மாடல் அரசின் விலையில்லா சீருடை,பாடப் புத்தகங்கள்,கல்வி உபகரணங்களை மாணவிகளுக்கு மேயர் கோ.ராமகிருஷ்ணன் வழங்கினார்.நிகழ்வில் துணை மேயர் ராஜீ ,மண்டல தலைவர் மகேஷ்வரி, மாமன்ற உறுப்பினர்கள் மன்சூர், மாரியப்பன்.ராஜேஷ்வரி,பகுதி கழக துணை செயலாளர் அப்துல் சுபகானி,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் காசிமணி நெல்லை டவுன் கல்லணை மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கனியம்மாள்,உதவி தலைமை ஆசிரியர் வாரகணி பேட்டை ராணி அண்ணா மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் சாந்தி,உதவி தலைமை ஆசிரியர்கள் சாவித்திரி,ராஜேஸ்வரி மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர்கள்,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.


தேனி தெற்கு மாவட்டம் ஆண்டிபட்டி அருகே முத்தனம்பட்டி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு அரசின் இலவச பாட நூல்களை பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் வழங்கினார். இதில் கிழக்கு ஒன்றிய செயலாளர் ராஜாராம் மாணவரணி மாவட்ட அமைப்பாளர் பிரகாஷ் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

### நெல்லை மாவட்டத்தில்

# ரூ.12.68 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

## பேரவைத் தலைவர் மு.அப்பாவு - அமைச்சர் கே.என்.நேரு வழங்கினர்!

நெல்லை, ஜூன் 5 -

நெல்லை மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு நீண்ட நாள் குடியிருப்புகளுக்கு பட்டா வழங்கி சிறப்பித்து வருகிறது. அதன்படி ரூ.12.68 கோடி மதிப்பில் 6,754 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற பேரவை தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினார் கள்.

நெல்லை மாவட்டம், அம்பாசமுத்திரம் அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் 30.05.2025 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டமன்ற பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார்,, நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர்இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் ஆகியோர் முன்னிலையில் ரூ.12.68 கோடி மதிப்பில் 6,754 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

அதன்படி வருவாய்த் துறை சார்பில் 258 பயனாளிகளுக்கு இ-பட்டாக்களும், ரூ.2.77 கோடி மதிப்பில் 187 பயனாளிகளுக்கு வரன்முறை பட்டாக்களும்,பட்டா மாற்றம் 868 பயனாளிகளுக்கும், ரூ.2.52 கோடி மதிப்பில் 172 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களும், 4823 பயனாளிகளுக்கு நகர நிலவரி திட்டத்தின் கீழ் பட்டாக்களும், பிற்படுத்தப்ப ட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் ரூ.35,500 மதிப்பில் 5 பயனாளிகளுக்கு தேய்ப்பு பெட்டிகளும், ரூ.56 ஆயிரம் மதிப்பில் 10 பயனாளிகளுக்கு தையல் இயந்திரங்களும், 50 பயனாளிகளுக்கு சீர் மரபினர் அடையாள அட்டைகளும், மாவட்ட தொழில் மையம் சார்பில் ரூ.29 இலட்சம் மதிப்பில் 24 பயனாளிகளுக்கு வேலையில்லா இளைஞர்களுக்கு தொழில் துவக்கும் திட்டத்தின் கீழ் கடனுதவிகளும், ரூ.2 இலட்சம் மதிப்பில் 13 பயனாளிகளுக்கு கலைஞர் கைவினைத் திட்ட உதவிகளும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் ரூ.6.26 கோடி மதிப்பில் 202 பயனாளிகளுக்கு கலைஞரின் கனவு இல்லமும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் ரூ.8.40 இலட்சம் மதிப்பில் 8 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்க ளும்,

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி வளர்ச்சி நிறுவனம் சார்பில் ரூ.30.62 இலட்சம் மதிப்பில் 14 பயனாளிகளுக்கு சிற்றுந்து வாகனம், சரக்கு வாகனம், சக்கர பயணியர் வாகனம், தொழில் கடனுதவிகளும், ரூ.4.50 இலட்சம் மதிப்பில் 9 பயனாளிகளுக்கு கறவை மாடு கடனுதவிகளும், ரூ.25 இலட்சம் செலவில் 50 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் உதவித் தொகைகளும்,50 பயனாளிகளுக்கு தூய்மை பணியாளர் உறுப்பினர் அடையாள அட்டைகளும், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் ரூ.10 இலட்சம் மதிப்பில் வாகைகுளம் ஊராட்சி சுய உதவிக்குழு கடனுதவிகளும், வேளாண்மைத்துறை சார்பில் ரூ.1,848 மதிப்பில் 3 பயனாளிகளுக்கு மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நலத்திட்டங்களும், ரூ.2,560 மதிப்பில் ஒரு பயனாளி களுக்கு உணவு மற்றும்ஊட்டச்சத்து இயக்கம் கீழ் நலத்திட்டங்களும், ரூ.300 மதிப்பில் குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கும், மாவட்ட சமூக நலத்துறை சார்பில் ரூ.1.50 இலட்சம் மதிப்பில் 5 பனாளிகளுக்கு இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத் தின் கீழ் வைப்புத் தொகைக்கான ஆணைகளையும் என மொதத்தம் ரூ.12.68 கோடி மதிப்பில் 6,754 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை சட்டமன்ற பேரவைத்தலைவர் மு.அப்பாவு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு ஆகியோர் வழங்கினர்.

### மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமை! நெல்லை மத்திய மாவட்டம்

# கழகப் பேச்சாளர் மில் ஜெ.குமார் இல்ல விழா!

## மு.அப்பாவு – பெ.கீதா ஜீவன் – ராஜ கண்ணப்பன் – கோவி.செழியன்–இரா.ஆவுடையப்பன் வாழ்த்து!

நெல்லை, ஜூன் 5 -

நெல்லை மத்திய மாவட்டம், கழகப் பேச்சாளரும் 21வது வட்டப் பிரதிநிதியுமான மில் ஜெ. குமார் - கே. ருக்மணி ஆகியோரின் புதல்வி கே. தர்ஷினி ஜோதிகாவின் மஞ்சள் நீராட்டு விழா 8.6.2025-ஞாயிற்றுக் கிழமை காலை 10 மணியளவில் திருநெல்வேலி பேட்டை சாதிக் மஹாலில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்டப் பொறுப்பாளர் மு. அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

இவ்விழாவில் மு. பேச்சி பாண்டியன், சொ. பெருமாள், ஏ.எஸ்.எஸ். லெட்சுமணன், ஜி. ராமகிருஷ்ணன் (எ) கிட்டு, கே.ஆர். ராஜு, எஸ்.வி. சுரேஷ், ஏ. தர்மர், பி. அன்பழகன், எம்.மாரியப்பன், சூ. அருள் மணி, வி. வெயிலயப்பன், எஸ்.வி. பொன்னையா பாண்டியன், ராஜா, எஸ். அப்பாஸ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சு. சுப்பிரமணியன், பி. சுப்பிரமணியன், வி.கே. முருகன், இரா.நமச்சிவாயம் (எ) கோபி, அன்டன் ஏ. செல்லதுரை, துபாய் சாகுல் ஹமீது, வி.ஏ. மாரிவண்ண முத்து, ஆ. துரை, எம்.பி. ராஜவர்மன், ஏ.எல்.பி. தினேஷ் ஆகி யோர் வரவேற்கின்றனர்.

நெல்லை இ. முத்தையா, இ.பா. ராவணன் ஆகியோர் தொகுப் புரையாற்றுகின்றனர்.

இவ்விழாவில் சட்டப் பேரவைத் தலைவர் மு. அப்பாவு, அமைச்சர்கள் பெ. கீதாஜீவன், ராஜ கண்ணப்பன், கோவி. செழியன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துகின்றனர்.

மேலும் டி.பி.எம். மைதீன்கான், என். மாலைராஜா, சி.ராபர்ட் ஃப்புருஸ் எம்.பி. சுப. சீதாராமன், விஜிலா சத்யானந்த், வசந்தம் ஏ.சி.ஜெயக்குமார், எஸ். முத்துசெல்வி, ஆ. பிரபாகரன், ஏ.அலெக்ஸ் அப்பாவு, எஸ். ஏ. சித்திக், ஆவின் ஆறுமுகம், கணேஷ் குமார் ஆதித்தன், எஸ். ராஜா முகம்மது, வி.எஸ். ஆர். ஜெகதீஸ், ஜி.நடராஜன், கா. முத்துராமலிங்கம், ஆ.க.மணி, தயா சங்கர் மற்றும் மாவட்ட, மாநகர நிர்வாகிகள், மண்டல நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், வட்டச் செலயாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நெல்லை பகுதிக் கழக பிரதிநிதிகள், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஒன்றிய கவுன்சிலர்கள், கழகப் பேச்சாளர்கள், செயல்வீரர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

எல்.ஐ.சி.எஸ். பேச்சிமுத்து, அ.அன்வர், ரா. பாவநாசம், சொ. மாரிமுத்து, பி.வி.எம்.குமார், பல்க். முத்துக்குமார், முசா. சே.க இஸ்மாயில் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



நெல்லை மாநகராட்சி மைய அலுவலக இராஜாஜி மண்டபத்தில் மாமன்ற கூட்டம் மேயர் கோ. ராமகிருஷ்ணன் தலைமையில் ஆணையாளர் மரு.என். ஓ.சுகபுத்ரா,துணை மேயர் கே.ஆர்.ராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.நிகழ்வில் மண்டல தலைவர்கள் பிரான்சிஸ் (பாளை) ரேவதி (குச்சை)கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்)மகேஸ்வரி (நெல்லை)மற்றும் மாமன்ற உறுப்பினர்கள்,மாநகரப் பொறியாளர் கண்ணன்,உதவி ஆணையாளர்கள், மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளில் விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் நகரில், துப்புரவு பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் மதிய உணவு வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.